**செய்தி வெளியீடு எண்: 503** **நாள்:16.08.2019**

**செய்தி வெளியீடு**

பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் பட்டயப்படிப்பு சேர்ந்து குறிப்பிட்ட காலகெடுவுக்குள் தேர்ச்சிபெறும் வாய்ப்பை தவறவிட்ட மாணாக்கர்களுக்கான இறுதி வாய்ப்பாக அக்டோபர் 2019 மற்றும் ஏப்ரல் 2020 ஆகிய இரு பருவங்களில் தேர்வு எழுத தமிழக அரசு அறிவித்துள்ளது. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பலவகை கல்லூரிகளில், பட்டயப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கான அக்டோபர் 2019 வாரியத் தேர்வுகளுக்கான தேர்வு கட்டணம் செலுத்தும் நாட்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அபராதமின்றி செலுத்த கடைசி நாள் : 20.08.2019

ரூபாய் 150 அபராதத்துடன் செலுத்த கடைசி நாள் : 29.08.2019

ரூபாய் 750 அபராதத்துடன் செலுத்த கடைசி நாள் : 24.09.2019

மாணாக்கர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் கட்டணம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். கூடுதல் விபரங்கள் தொழில்நுட்பக் கல்வி இயக்கக இணையதளம் www.tndte.gov.in ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**